1975 நவம்பர் 6]

Edward Variety of Rose Flowers.

* 80 Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that the Physical Sciences Department of the Tamil Nadu Agricultural University has developed a method to extract 'Concentrate' from the Edward Variety of Rose flowers; and

(b) if so, the details thereof?

எட்வர்டு வகை ரோஜா மலர்கள்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) எட்வர்டு வகை ரோஜா மலர்களிலிருந்து கெட்டித் தைலம் (Concentrated) வடிக்கும் முறையொன்றைத் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் அறிவியல் (Physical Sciences) துறை கண்டு பிடித்துள்ளது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று இம்மன்றத்தில் வைக்கப்பட்டு உள்ளது.

திரு. கே. எஸ். கணபதி: இந்த எட்வர்டு ரோஜா என்பது தமிழகத்திலே சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய ரோஜா தான். இதிலிருந்து தைலம் எடுக்கப்படுகிறது. இது வாசனைப் பொருள்கள் தயாரிப்பவர்களுக்கு வெகு வாகப் பயன்படுகிறது. இது அதிகம் பயிராகிற நேரத்திலேயே இதிலிருந்து தைலம் தயாரிக்கலாம். கிலோ 4 அணாவிற்கு விற்கிறது. இந்த ரோஜா விலிருந்து தைலம் எடுத்து விற்பனை செய்வதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணி நமக்குக் கிடைக்கும். அந்த வகையிலே இந்த அரசு அதைப் பற்றிப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஏற்கெனவே இந்த மாமன்றத்தின் முன் வைத்துள்ள அறிக்கையின்படி, இதிலுள்ள சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பார்த்து, சாத்தியமாக இருந்தால் செய்யலாம். ரோஜாவிலிருந்து முதலிலே

@ 97 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அந்த கான்கிரீட், பிழம்பு எடுத்து அதிலிருந்து பிரித்து அந்தத் தைலத்தை எடுக்க முடியும். அதற்கு நல்ல கிராக்கி இங்கே இருக்கிறது. வெளிநாட்டிலேயும் இருக்கிறது. ஆனல் அதை எந்த முறையில் செய்வது, என்னென்ன சாத்தியக் கூறுகள் இருக்கின்றன, யார் செய்வது என்பனவெல்லாம் ஆராயப்பட வேண்டும். யாராவது தொழிலதிபர்கள் முன்வந்தால் நிச்சயமாக முயற்சிக் கலாம். இது நல்ல லாபம் தரக்கூடியதாகவும் ஒரு நல்ல தொழிலாகவும் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம்மேலவையின் ஒப்புதலுக்காக, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1974) பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது என்பதை அவைக்கு அறிவிக் கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

கமுதி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவுக் கல்லூரியில் நிர்வாகத்தினருக்கும் ஆசிரியர்களுக்குமிடையே உள்ள குழப்ப நிலையால் ஏற்பட்டிருக்கும் வேலை நிறுத்தம், உண்ணுவிரதம் ஆகியவை குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இரண்டு கவன ஈர்ப்பு முன்னறி விப்புகளும் ஒரே பொருள் குறித்ததாக இருப்பதால், இரு உறுப்பினர்களும் முன்மொழிந்து கவனத்திற்குக் கொண்டுவந்த பின்னர், அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள்.